வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 22.10.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ரஷ்யாவின் கசான் நகரில், 16-ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினை இருதரப்பு ரீதியில் சந்தித்துப் பேசினார்.

கூட்டுறவுத் துறை சார்ந்த 2-ஆவது வெண்மைப் புரட்சிக்கு, இந்தியா தயாராகி வருவதாக மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

நாட்டில், நுகர்வு, முதலீடுகளுக்கான தேவை உட்பட, பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணிகள் வலுவடைந்து வருவதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்த தாஸ் தெரிவித்துள்ளார்.

இன்று வங்க கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிரப் புயலாக வலுப்பெற்று, வரும் 24, 25-ஆம் தேதிகளுக்கு இடைபட்ட இரவில், ஒடிசா கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

*பிரதமர்-ரஷ்யா*

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ரஷ்யாவின் கசான் நகரில், 16-ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, ரஷ்ய

அதிபர் திரு விளாடிமீர் புட்டினை சந்தித்து இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார். உலக நாடுகளுக்கு இடையிலான பிணக்குகளை தீர்ப்பதில் பேச்சு வார்த்தைகள் மற்றும் ராஜீயத் துறை ரீதியிலான முயற்சிகளின் முக்கியத் துவத்தை அவர் வலியுறுத்தினார். ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையே அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை விரைவில் கொண்டு வர இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்றும் அவர் கூறினார். கசான் நகரில் தூதரகம் அமைப்பதான இந்தியாவின் முடிவை ரஷ்ய அதிபர் வரவேற்றார்.

முன்னதாக பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கசான் நகரைச் சென்றடைந்த பிரதமர் திரு நரேந்திர மோடியை அங்குள்ள இந்திய சமூகத்தினர் கிருஷ்ணா பஜன் பாடி வரவேற்றனர். தொடர்ந்து, தத்தார் மற்றும் இந்திய நடனங்களை ஒருங்கிணைத்து ரஷ்ய கலைஞர்கள் வழங்கிய கலை நிகழ்ச்சிகளை பிரதமர் பார்வையிட்டார். பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த 2 நாள் ரஷ்யப் பயணத்தின் போது 16-ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதுடன் சீன அதிபர் உள்ளிட்ட தலைவர்களையம் இருதரப்பு ரீதியில் சந்திக்க இருக்கிறார்.

*வாழ்த்து*

இன்று பிறந்த நாள் காணும் மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா-விற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கடுமையாக உழைக்கும் தலைவரான திரு அமித் ஷா, சிறந்த நிர்வாகியாக முத்திரை பதித்தவர் என்றும், பாரதிய ஜனதா கட்சியை வலுப்படுத்தும் பணிகளுக்கு அவர் தமது வாழ்வையே அர்ப்பணித்து, முன்னேறிய இந்தியா என்னும் கனவை நனவாக்க பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார். புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி உட்பட பல தலைவர்களும், திரு அமித் ஷா விற்கு பிறந்த நாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*அமித் □ ா*

பால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நாட்டின் அனைத்து 8 கோடி விவசாயிகளையும் ஒரே கூட்டுறவு கட்டமைப்பின் கீழ் ஒருங்கிணைக்கும் வகையிலான 2-ஆவது வெண்மை புரட்சிக்கு இந்தியா தயாராகி வருவதாக மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். இன்று குஜராத் மாநிலம் ஆனந்தில் தேசிய பால்வள மேம்பாட்டு ஆணையத்தின் வைர விழாக் கொண்டாட்டங்களில் உரையாற்றிய அவர், தற்போது நாட்டில் ஒன்றரை கோடி பால் உற்பத்தியாளர்கள் மட்டுமே கூட்டுறவு அமைப்புகளில் இடம் பெற்றுள்ளதாகவும் பெரும்பாலான பால் உற்பத்தியாளர்கள் சுரண்டலுக்கு ஆளாகி இருப்பதாகவும் கூறினார். இந்தியாவின் பால் வளத் துறை, உலக சராசரியை விட அதிகமாக, ஆண்டுக்கு 6 சதவிகித அளவில் வளர்ச்சி அடைந்து வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இந்த வெற்றியிலும் பால்

உற்பத்தியாளர்களின் பொருளாதார மேம்பாட்டிலும், தேசிய பால் வள மேம்பாட்டுக் கழகத்தின் பங்கு முக்கியமானது என்று அவர் பாராட்டினார். இந்தியாவின் கூட்டுறவு பால் உற்பத்தி பொருட்களை உலகச் சந்தைக்கு உயர்த்தியதிலும் பால்வள மேம்பாட்டு வாரியத்தின் பங்கு பாராட்டத் தக்கது என்று அவர் குறிப்பிட்டார். நாட்டின் பால்வளத் துறையை மேலும் வலுப்படுத்தும் வகையில் தேசிய கோகுல் இயக்கம் உள்ளிட்ட பல்வேறு முன் முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருவதாக திரு அமித் ஷா தெரிவித்தார். அடுத்த 5 ஆண்டுகளில் 2 லட்சம் கூட்டுறவு அமைப்புக்களை நிறுவ பிஜேபி அரசு திட்டமிட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

*ரிசர்வ் வங்கி*

இந்தியாவில், நுகர்வு, முதலீடுகளுக்கான தேவை உட்பட, பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படை காரணிகள் வலுவடைந்து வருவதால், நாட்டின் வளர்ச்சிப் பயணம், பாதிப்பின்றி தொடர்வதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்த தாஸ் கூறி உள்ளார். வேளாண் துறை மற்றும் கிராமப்புற தேவைகள் பற்றிய மதிப்பீடுகள் மேம்பட்டுள்ளதால், தனிநபர் நுகர்வு அதிகரிக்கும் என்றும், சேவைத் துறை படிப்படியாக தொடர்ந்து மேம்பட்டு வருவதால், நகர்புறத் தேவைகளை நிறைவேற்ற ஏதுவாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மத்திய-மாநில அரசுகளின் செலவினங்கள், பட்ஜெட் மதிப்பீடுகளுக்கு ஏற்ப அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் ரிசர்வ் வங்கி ஆளுநர்

கூறி உள்ளார். இதுகுறித்து ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள ஆவணத்தில், நடப்பு நிதியாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 7.2 சதவிகிதம் அதிகரிக்கும் என்றும், நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையிலான பண வீக்கம், 4.5 சதவிகிதமாக இருக்கும் என்றும் மதிப்பிடப் பட்டுள்ளது.

*தேசிய தண்ணீர் விருது*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று புதுடெல்லியில் 5-ஆவது தேசிய தண்ணீர் விருதுகளை வழங்கி சிறப்பித்தார். நீர் வளத்தை பாதுகாப்பதில் சிறந்த முறையில் செயல்பட்ட மாநிலங்கள், மாவட்டங்கள், கிராம பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், பயன்பாட்டாளர் அமைப்புகள் மற்றும் சிவில் சமூகத்தினருக்கு, 9 பிரிவுகளின் கீழ் விருதுகள் வழங்கப்பட்டன. மத்திய அரசின் ஜல்ஜீவன் இயக்கத்தின் கீழ் நாட்டின் 78 சதவிகித கிராமப்புற வீடுகளுக்கு, குழாய் மூலமான குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனால் கிராமப்புற மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத் தகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் குடியரசு தலைவர் கூறினார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதால், நீர் வளத்தை பாதுகாப்பதில் மாநில அரசுகளும் முக்கிய பங்கேற்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார். நீர்வளப் பாதுகாப்பில் சிறந்த முறையில் செயல்பட்ட மாநிலங்களுக்கான முதல் பரிசு ஒடிசாவிற்கும், 2-ஆம் பரிசு உத்தரபிரதேசத்திற்கும் வழங்கப்பட்டது. 3-ஆம் பரிசை குஜராத்தும், புதுச்சேரியும் பகிர்ந்து கொண்டன.

*வானிலை*

வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, இன்று காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று ஒடிசா மாநிலம் பாராதீப்-பிற்கு 700 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது. இது மேற்கு, வடமேற்கு திசையில் மேலும் நகர்ந்து நாளை புயலாகவும், நாளை மறுநாள் 24-ஆம் தேதி தீவிரப் புயலாகவும் வலுப்பெறக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த டானா தீவிரப் புயல், வரும் 24, 25-ஆம் தேதிகளுக்கு இடைபட்ட இரவில், பாலாசோர்-பத்ரக் இடையே, ஒடிசா கடற்கரையை கடக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. புயல் கரையைக் கடக்கும் போது அதிகபட்சம் மணிக்கு 120 கிலோமீட்டர் வேகத்திலான காற்றுடன் கனமழை பெய்யக் கூடும் என்பதால் நிலவரங்களை சமாளிக்க, ஒடிசா அரசு, சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளையும் முழு அளவில் முடுக்கி விட்டுள்ளது. புயல் தாக்குதலுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள பகுதிகளில் இருந்து மக்கள் அனைவரையும், நாளை மாலைக்குள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்ற மாநில அரசு திட்டமிட்டுள்ளது. 800 இடங்களில் அனைத்து அடிப்படை வசதிகளுடன்

கூடிய புயல் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஒடிசாவின் அனைத்து 14 கடலோர மாவட்டங்கள் மற்றும் அண்டை மாவட்டங்களில், பள்ளிகளுக்கு, நாளை முதல் 3 நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மத்திய-மாநில பேரிடர் மீட்பு படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். ராணுவம், கடற்படை மற்றும் கடலோர காவல் படையின் உதவியும் நாடப்பட்டுள்ளதாக ஒடிசா அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*வானிலை-தமிழ்நாடு*

வங்க கடலில் புயல் உருவாகி வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழகத்திலும் சென்னை, கடலூர், புதுச்சேரி, நாகப்பட்டிணம், காரைக்கால், பாம்பன் உள்ளிட்ட துறைமுகங்களில் 1-ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. தென் தமிழகப் பகுதிகளின் மேல் வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுவதால் தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் வரும் 28-ஆம் தேதி வரை மழை நீடிக்கலாம் என வானிலை முன் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய தினம், கோவை,நீலகிரி, ஈரோடு, திருப்பூர், தேனி, திண்டுக்கல், சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கு மற்றும் மத்திய மேற்கு வங்க கடல் பகுதிகளில் இன்று

முதலும், வடமேற்கு வடகிழக்கு வங்க கடல் பகுதிகளில் நாளை முதலும் சூறாவளி காற்று வீசக் கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிக பட்சமாக, திருவாருரில் 9 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*புதுச்சேரி-மராத்தான்*

மார்பக புற்றுநோய் குறித்து விழிப்பு ஏற்படுத்தும் வகையில் ஜிப்மர் மருத்துவமனை இன்று புதுச்சேரியில் மராத்தான் ஓட்டம் ஒன்றை நடத்தியது. ஜிப்மரில் இருந்து கடற்கரை சாலை காந்தி சிலை வரை நடைபெற்ற இந்த மராத்தான் ஓட்டத்தை, ஜிப்மர் பொறுப்பு இயக்குநர் டாக்டர் கவுதம் ராய், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் துரைராஜன், கல்விப் புல இணை முதல்வர் டாக்டர் ரவி சிட்டோரியா ஆகியோர், கொடி அசைத்து தொடக்கி வைத்தனர். ஜிப்மர் மருத்துவமனையின் புற்றுநோய் மருத்துவ சிகிச்சை துறையும், மார்பக புற்றுநோயில் இருந்து உயிர் பிழைத்தவர்கள் பற்றிய ஐசிஎம்ஆர் ஆய்வுக் குழுவும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த, இந்த மராத்தான் ஓட்டத்தில், தொழில் முறை மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், மற்றும் தொண்டு அமைப்புகளின் உறுப்பினர்கள் உட்பட சுமார் 150 பேர் கலந்து கொண்டனர்.

*காப்பி எடிட்டர்*

புதுச்சேரி ஆகாஷ்வாணி வானொலி நிலையத்தில் ஒப்பந்த அடிப்படையிலான ஒரு Copy Editor பணியிடத்திற்கு, விண்ணப்பங்கள்

வரவேற்கப்படுகின்றன. 35-வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகள், ஊடகத் துறையில் 5 ஆண்டு அனுபவம் பெற்றிருந்தால், இதற்கு விண்ணப்பிக்கலாம். இதழியல், வெகு ஜனத் தொடர்பியல், மற்றும் சம்பந்தப்பட்ட இதர துறைகளில் பட்டம் அல்லது முதுகலைப் பட்டயம் பெற்றவர்களாக இருந்தால், 3 ஆண்டு ஊடகத் துறை அனுபவம் போதுமானது. விண்ணப்ப தாரர்கள், இந்தி அல்லது ஆங்கிலம், மற்றும், தமிழில் மொழித் திறன் கொண்டவர்களாக இருத்தல் வேண்டும். சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளத் தேடுதல் பொறியின் பயன்பாட்டில் அனுபவம் உள்ளவர்களாகவும், நடப்பு விவகாரங்கள், பிராந்தியப் பிரச்சனைகள், மற்றும் தேசியப் பிரச்சனைகளை அறிந்தவர்களாகவும் இருத்தல், விரும்பத் தக்க தகுதியாக கருதப்படும். ஓராண்டு காலத்திற்கான, பின்னர் நீட்டிக்கத் தகுந்த, இந்த முழுநேர ஒப்பந்தப் பணிக்கு, மாதம் 35 ஆயிரம் ரூபாய் தொகுப்பூதியம் வழங்கப்படும். தகுதியும், மேற்கூறிய நிபந்தனைகளின் அடிப்படையில் பணிபுரியும் ஆர்வமும் உள்ளவர்கள், applications.prasarbharati.org என்ற இணையதளம் மூலம், உரிய சான்றிதழ் நகல்களுடன் விண்ணப்பிக்கலாம்.

*பிஎஸ்என்எல்*

மத்திய தகவல் தொடர்பு அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா, இன்று புதுடெல்லியில் பிஎஸ்என்எல் நிறுவனத்தின் புதிய சின்னத்தை

வெளியிட்டு, Intra-net Fiber TV அதன் 7 புதிய சேவைகளையும் தொடக்கி வைத்தார். பிஎஸ்என்எல் நிறுவனத்தின் புதிய சின்னம், அதன் வலுவையும், மக்களின் நம்பிக்கை, எளிதில் அணுகத் தக்க தன்மை உள்ளிட்ட அம்சங்களையும் குறிப்பதாக அமைச்சர் கூறினார். உலகிலேயே தனக்கான 4-ஜி தொலை தொடர்பு கட்டமைப்பை தானே உருவாக்கிக் கொண்ட 6 நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்வதாகவும், நாடு விரைவிலேயே 5-ஜி தொலை தொடர்ப கட்டமைப்பிற்கு மாறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*சுற்றுலா-ெ□ காவத்*

2029-ஆம் ஆண்டிற்குள் இந்தியாவின் அமைப்பு ரீதியிலான சுற்றுலாத் துறையின் மதிப்பு, 500 மில்லியன் டாலராக 2 மடங்கு அதிகரிக்கும் என்று மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத் கூறி உள்ளார். இன்று பாட்னாவில், 2 நாள் சுற்றுலா கண்காட்சியை தொடக்கி வைத்துப் பேசிய அவர் இந்தியாவில் உள்நாட்டு சுற்றுலா, வெளிநாட்டு சுற்றுலா ஆகிய இரண்டுக்கும், வளர்ச்சி. வாய்ப்புகள் அதிகம் இருப்பதாக கூறினார். வளர்ச்சி வேகம் அதிகம் உள்ள இந்தியாவின் சுற்றுலாத் துறை, நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சிக்கான உந்து சக்தியாக திகழ முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். நீண்டகால உள்கட்டமைப்பு முதலீடுகளுக்கான பட்ஜெட் நிதியில் சுற்றுலாத் துறை சேர்க்கப்பட்டதற்காக, அமைச்சர் திரு

ஷெகாவத், பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். பீகார் முதலமைச்சர் திரு நிதிஷ்குமார் உள்ளிட்டோர் சுற்றுலா கண்காட்சியின் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். நேபாள், பூட்டான் மற்றும் 17 இந்திய மாநிலங்கள் இக்கண்காட்சியில் அரங்குகளை அமைத்துள்ளன.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று ரஷ்யாவின் கசான் நகரில், 16-ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, ரஷ்ய அதிபர் திரு விளாடிமீர் புட்டினை இருதரப்பு ரீதியில் சந்தித்துப் பேசினார்.

கூட்டுறவுத் துறை சார்ந்த 2-ஆவது வெண்மைப் புரட்சிக்கு, இந்தியா தயாராகி வருவதாக மத்திய கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார்.

நாட்டில், நுகர்வு, முதலீடுகளுக்கான தேவை உட்பட, பொருளாதார வளர்ச்சிக்கான அடிப்படைக் காரணிகள் வலுவடைந்து வருவதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சக்தி காந்த தாஸ் தெரிவித்துள்ளார்.

இன்று வங்க கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம், தீவிரப் புயலாக வலுப்பெற்று, வரும் 24, 25-ஆம் தேதிகளுக்கு இடைபட்ட இரவில், ஒடிசா கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

----------------------------